

மதுரை மாநகர் வருகை தந்த கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பகுதி இளைஞரணி அமைப்பாளர் திலீபன் சக்கரவர்த்தியின் ஆண் குழந்தைக்கு சூரியன் சக்கரவர்த்தி என்று பெயர் சூட்டினார்.

# மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவிப்பு!



*மதுரை, பிப்.26-*

*மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் இன்று (26.02.2026-வியாழக் கிழமை) மாலை 05.00 மணி அளவில் அண்ணாநகர் ட்வின்ஸ் மஹாலில், நடைபெற இருப்பதால் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் கள், பகுதி கழக, வட்ட கழக செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பி னர்கள் அனைவ ரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*பொருள் :*

*•மார்ச்- 1 கழக தலைவர்-முதல்வர் அவர்கள் பிறந்த நாள் விழா குறித்து,*

*• மார்ச் - 9 திருச்சியில் நடைபெறும் “ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்” மாநில மாநாடு குறித்து,*

*•வெல்லும் தமிழ் பெண்கள் பரப்புரை குறித்து,*

*•இறுதி வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் சம்மந்தமாக.*

---

## இது பெண்களுக்கான ஆட்சி! தேர்தலிலும், அரசியல் அதிகாரத்திலும் –

# நம்முடைய உழைப்புக்கான அங்கீகாரத்தை முதல்வர் நிச்சயம் தருவார்!

## மகளிர் அணி – மகளிர் தொண்டரணி சமூக வலைதளப் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. உறுதி!





சென்னை, பிப்.26–

தி.மு.க. மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி சார்பில், 23.02.2026 அன்று சமூக வலைதளப் பொறுப்பாளர்களுக்கான சிறப்புப் பயிற்சிப் பாசறை, சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கலந்து கொண்டு, வரும் சட்டமன்றத் தேர்தலில் கழகத்தின் வெற்றிக்கு ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து உரையாற்றினார்.

இதில் அவர் உரையாற்றியது வருமாறு:–

ஒவ்வொரு காலகட்டத்திலும் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னை எப்பொழுதுமே தகவமைத்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய இயக்கம் தொடங்கப்பட்ட காலத்திலே, எழுத்தின் வடிவமாக, எழுத்தின் மூலமாக, பத்திரிக்கைகள் மூலமாக கிட்டத்தட்ட ஒரு நூற்றுக் கணக்கான பத்திரிக்கைகளை நடத்தி இருக்கக்கூடிய ஒரு இயக்கம் என்ற பெருமை ஒரு இயக்கத்திற்கு இருக்குமென்றால், அது திராவிட முன்னேற்றக் கழகத்துக்குத்தான்.

அதே நேரத்தில், மேடை நாடகங்கள் வழியாக மக்களைச் சென்றடைந்த ஒரு இயக்கம் இருக்கிறது என்றால், மிகப்பெரிய அளவிலே அதைப் பயன்படுத்தியவர்கள் என்றால் அது திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட இயக்கம்.

இசைப்பாடல்களின் வழியாக நம்முடைய இயக்கத்தின் கருத்துகளை பாடல்களாக பல பகுதிகளில் இருக்கக்கூடிய மக்களிடம் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். தலைவர் கலைஞர் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள், நமது இயக்கத்தில் இருக்கக்கூடிய பல எழுத்தாளர்கள், திரைப்படங்களை அடுத்து தன்னுடைய கையகப்படுத்தினார்கள். அதன் வழியாக நம்முடைய இயக்கக் கருத்துக்களை கொண்டுபோய் மக்களிடத்தில் சேர்த்தார்கள்.

ஒரு எழுத்தாளருக்கு, ஒரு வசன கர்த்தாவுக்கு, ஒரு படத்தில் டைட்டில் கார்டு போடுகிறார்கள், அங்கே ஒரு அரங்கமே எழுந்து கை தட்டுகிறது, ஆர்ப்பரிக்கிறது என்றால் தலைவர் கலைஞர் அவர்களுக்குத்தான் நடந்தது. அதனால், வார்த்தைகளை மொழியை அவ்வளவு அழகாக எடுத்து ஆண்ட இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

மேடைப் பேச்சுக்களில், நாம் இன்றைக்கு இதை சொன்னா மக்கள் கேட்பார்களா? இதெல்லாம் தேவையா? மக்களிடம் பேசணுமா? அப்படின்னு நாம இன்னைக்கு யோசிச்சு யோசிச்சு நாமே தயார் செய்து தான் பல விஷயங்களைப் பேசி வருகிறோம்.

ஆனால், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பேச்சுக்களை எல்லாம் நாம் இப்பொழுது எடுத்துப் பார்த்தால் ரோமப் பேரரசு அதைப் பத்தி எல்லாம் வந்து பொதுக்கூட்டங்களில் பேசி இருக்கிறார். என்னுடைய மக்களுக்கு உலக சரித்திரம் தெரிய வேண்டும்.

### அறிவு என்பதே அடிப்படை!

தலைவர் கலைஞர் அவர்களுடைய நெஞ்சுக்கு நீதி படித்தால், இந்த உலகம் முழுவதும் என்னென்ன நடந்தது அப்படிங்கிற அத்தனை விஷயங்களையும் எடுத்துச் சொல்லுவார். . என்னுடைய உடன்பிறப்பிற்கு இந்தச் செய்தியை நான் சொல்ல வேண்டும். அவர்களை அரசியல் படுத்த வேண்டும் என்று அதைச் செய்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். அதனால், அறிவு என்பதுதான் நம்முடைய அடிப்படை.

அது பெண்களுக்கு ரொம்ப முக்கியமான ஒரு விஷயம். அது நமக்கு இயற்கையாவே வரும். மத்தவங்களோட பெண்களுக்கு கொஞ்சம் ஜாஸ்தி தான். அதனால இயற்கையாக வரக்கூடிய ஒன்று. அதன் அடிப்படையில்தான் நாம் இன்று அதைக் கட்டி அமைத்திருக்கிறோம். உருவாக்கி இருக்கிறோம். அதனால்தான் மத்தவங்களுக்கும் நமக்கும் சில வித்தியாசங்கள் இருக்கு.

சில பேர் தண்ணியைப் பாதுகாக்கறதுக்கு தர்மகோல் போடுவாங்க, அதை நாம் பண்ண மாட்டோம். ஏன்னா நமக்கு புரிதல் இருக்கு. அறிவு இருக்கு. அறிவியல் அறிவும் நமக்குச் சொல்லப்பட்டு இந்த இயக்கம் வளர்க்கப்பட்டிருக்கிறது. இது மாதிரி நிறைய விஷயங்களை நாம சொல்லலாம்.

அப்படிப்பட்ட ஒரு இயக்கம், புதுசா சோஷியல் மீடியான்னு ஒன்னு வரப்போகுது. மொதல்ல வந்து எனக்குத் தெரிஞ்ச ஒருத்தர் அதுக்குள்ள போறாரு. எனக்கும் அப்போது, ட்விட்டர் அக்கவுண்ட், பேஸ்புக் எல்லாம் இல்லை. எங்க அப்பா, தலைவர் கலைஞர் அவர்கள். எல்லாவற்றுக்கும் முன்னாடி சோஷியல் மீடியாவில் இருக்கக்கூடிய மக்களோடு உரையாடத் தொடங்கிய ஒரு தலைவர், தன்னுடைய 80வது வயதில்.

### சோஷியல் மீடியா

என்ன வயசா இருந்தாலும், யாரா இருந்தாலும் என்ன படிச்சு இருந்தீங்கன்னாலும் இன்னைக்கு சோஷியல் மீடியா ஹேண்டில் பண்றது ரொம்ப சாதாரண விஷயம். பெண்கள் ஒரு கருத்து சொல்லும் போது இந்தச் சமூகம் அதை மிக மோசமாகதான் சாடும். உங்களுக்கு என்ன சொன்னா வலிக்குமோ அதைத் தேடி தேடி தேடிப் போடுவாங்க. நீங்களும் நிறைய பேர் வந்து அந்த இடத்துல உடைஞ்சு போயி அழுறதை நான் பாத்துருக்கேன்.

உங்களைப் பற்றிச் சொல்லுவதற்கு யாருக்கும் உரிமை இல்லை. நீங்க யாருன்னு முடிவு பண்ற உரிமை உங்களுக்கு மட்டும்தான் இருக்கு. நீங்க யாருக்கும் விளக்கம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

அவர்கள் சொல்லும் கருத்துக்கள், நம்மை வீட்டுக்குள்ள திருப்பிக் கொண்டு போய் சமையல் அறையில வச்சுக்கனும்ங்கறதுக்காகச் சொல்றாங்க. நீ வீட்டை விட்டு வெளிய கால் வைக்கறியா? நீ உள்ள போறதுக்கு நான் என்ன வழி பண்றேன் பாரு. நீ சோஷியல் மீடியால கருத்து சொல்றியா? இனிமே நீ வாயைத் திறக்காமல் இருக்குறதுக்கு நான் என்ன சொன்னா நீ வாயை மூடிட்டு போவான்னு எனக்குத் தெரியும். நான் சொல்லுவேன். இத தான் அவங்க தொடர்ந்து செய்கிறார்கள்.

நீ ஒன்னு சொன்னியா? நான் பத்து அடி முன்னாடி வரேன் அப்படின்னு போனா நீ ஒன்னு சொன்னியா? நான் உன்ன பாத்து பயந்துட்டு போறவன் நான் இல்ல. சரியா? இன்னும் ஒரு உதாரணம் சொல்லுகிறேன் தலைவர் கலைஞரைப் பற்றி. அவர் சோசியல் மீடியாவுக்கு வந்தவுடனே. எல்லாமே நல்ல விஷயமா இருக்கு. நம்மள யாரும் திட்டவே இல்லை என்று கேட்டார்.

### எதிர்வினை

அதற்கு, நாங்கள் இதனை மாடரேட் பண்ணியுள்ளோம். நம்மள ரொம்ப மோசமா திட்டி வர்ற கருத்த எல்லாம் நாங்க எடுத்துடுறோம் அப்படின்னு சொன்னப்ப தலைவர் என்ன சொன்னாருன்னா. தயவு செய்து அத பண்ணாதீங்க. என்ன எதிர்த்து ஒரு கருத்தைப் பதிவு செய்ய வேண்டும் என்று நினைத்தால் அதைச் செய்யட்டும். நான் அதைப் படிக்க வேண்டும். அதுதான் திராவிட முன்னேற்றக் கழகம். எதிர்த்துப் பேசினாலும் அந்த எதிர் கருத்திலே என்ன இருக்கிறது என்று தெரிந்துகொண்டு அதற்கு எதிர்வினை ஆற்றக்கூடிய அளவிற்கு நம்மை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சிப் பொறுப்பேற்றுக்கொண்ட அன்று முதல் பெண்களுக்கான இந்த ஆட்சி நம்மளோட ஆட்சி தான். நமக்கான ஆட்சி. மத்தவர்கள் எல்லாம் அடுத்து தான். மகளிர் உரிமைத் தொகை, புதுமை பெண் திட்டம் கல்லூரிக்குப் போகக்கூடிய நம்ம வீட்டு பெண்களைப் பற்றித் தான் கவலைப்பட்டார்.

அதே போலக் காலை உணவு திட்டம், பெண்களுடைய வேலைச் சுமையை குறைப்பதற்காகக் கொண்டு வந்து இருக்கிறேன் என்று முதல்வர் சொல்கிறார். விடியல் பயணம் திட்டம், பெண்களுக்கு சுதந்திர உணர்வை உணர்ந்து கொள்ள வேண்டும் என்று கொண்டுவரப்பட்ட திட்டம். இந்த ஆட்சி நீடிக்க வேண்டும் என்று உழைப்பதிலே நமக்குத் தான் எல்லாரையும் விட அதிக பங்கு நமக்குத் தான்.

### பி.ஜே.பி. பரப்பும் பொய்ச் செய்திகள்!

எத்தனையோ போராட்டங்களைத் தாண்டித் தான் இத்தனை திட்டங்களை நாம் தந்து கொண்டிருக்கிறோம். அதை நாம் கொண்டு போய்ச் மக்களிடம் சேர்க்கணும். பிஜேபி தொடர்ந்து பொய் செய்திகளைப் பரப்பிக் கொண்டிருப்பார்கள். இல்லாத ஊர் பெயரைப் போட்டு இந்த இடத்துல வந்து தமிழர்கள் எல்லாம் சேர்ந்து வட இந்தியர்களை அடிச்சாங்க அப்படின்னு ஒரு செய்தியைப் பரப்பலாம். இல்லனா ஜாதி பிரச்சினையை உருவாக்கக்கூடிய ஒரு செய்தியை அது பண்ணலாம்.

நாலாயிரம் கோயில்களுக்கு நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகு கும்பாபிஷேகம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் என்ன நடந்துதுன்னா கோயில் இடிக்கிறாங்க என எத்தனையோ பொய் செய்திகளை அவர்கள் தினம் பரப்பிக் கொண்டிருப்பார்கள். தேர்தல் நெருங்க நெருங்க பொய்ச் செய்திகள் இன்னும் அதிகரித்துக் கொண்டே இருக்கும்.

அதற்குப் பதில் நாம் சொல்லி ஆக வேண்டும். ஏனென்றால், அவங்க தினம் ஒரு விஷயத்தை திரும்பத் திரும்பச் சொல்லும்பொழுது சாதாரண மக்களுக்கு எது உண்மை எது பொய் என்பது தெரியாது. அதனால், நாம் அவர்களிடம் சென்று, உண்மை என்ன அப்படின்னு சொல்ல வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

வெல்லும் தமிழ் பெண்கள் பரப்புரை மூலம் வீடு வீடாக சென்று இளைஞர்கள், இளம் பெண்கள் இருப்பார்கள். அவர்களுக்கு, உண்மையாகவே இந்த ஆட்சி என்ன செய்திருக்கிறது? திராவிட இயக்கம் என்ன செஞ்சிருக்கு? அவர்களின் தாத்தா எப்படி இருந்தாரு? இன்னைக்கு அவங்க எப்படி இருக்காங்க? நாம இல்லன்னா அவங்களால இன்றைக்கு படிச்சு இந்தக் காலேஜுக்கு வாய்ப்பு இருந்திருக்காது என்பதை அவர்களிடம் எடுத்துச் சொல்லுங்கள்.

வீட்டில் இருக்கக்கூடிய பெண்கள் படிக்கிறதுக்கு எத்தனை திட்டங்கள் கொண்டுவரப்பட்டது. தலைவர் கலைஞர் அவர்கள்தான் சின்ன சின்ன ஊர்களில் கல்லூரிகளை உருவாக்கினார். அந்தக் கல்லூரிகளை உருவாக்க வில்லை என்றால் பிள்ளைங்களால படிக்க முடியாது. என்ன படிக்கிறதுன்னு கூட நம்ம பிள்ளைங்களுக்கு யாரும் சொல்லித் தர்றதுக்கு வழி இல்லை அன்று.

### புதுமைப் பெண் திட்டம்!

திருமண உதவித்திட்டம் மூலம் பெண் பிள்ளைகளை பத்தாவது வரைக்கும் படிக்கவை. நான் கல்யாணம் பண்ணி வைக்கிறேன். கல்யாணத்துக்காகக் கொண்டு வந்த திட்டம் இல்ல. அந்தப் பொண்ணு படிக்கணும்ங்கறதுக்காகக் கொண்டு வந்த திட்டம். அந்தப் பொண்ணு படிச்சு பன்னிரண்டு முடிச்சு, கல்லூரிக்கு போகும்போது புதுமை பெண் திட்டம் மூலம் ஆயிரம் ரூபாய்யை முதலமைச்சர் தருகிறார்.

அந்தத் திருமண உதவித்திட்டம் இன்று புதுமைப்பெண் திட்டமாக இன்னொரு உருவத்துல அந்தப் பிள்ளைங்கள கொண்டுபோய் கல்லூரியில் சேர்த்துருக்கு. கல்லூரியில இருந்து வரக்கூடிய பிள்ளைங்களுக்கு வேலை கிடைக்குமான்னா ரிசர்வேஷன் அரசுப் பணிகளில் இன்றைக்கு 40% சதவீதம் பெண்களுக்கு இட ஒதுக்கீடு உருவாக்கப் பட்டு இருக்கு.

இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய வொர்க் ஃபோர்ஸ் (WORK FORCE) 42% சதவீதம் பெண்கள். கிட்டத்தட்ட 50% சதவீதம் தமிழ்நாட்டுல இருக்கக்கூடிய பெண்கள் வேலைக்குப் போகக்கூடிய ஒரு நிலையை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா உருவாக்கித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர், இந்தத் தேர்தலிலேயே நம்முடைய உழைப்புக்கான ஒரு அங்கீகாரத்தை நிச்சயம் தருவார்கள் என்று நாம் அத்தனை பேரும் உறுதியோடு இருக்க முடியும். ஏனென்றால் இது பெண்களுக்கான ஆட்சி, தேர்தலிலும், அரசியல் அதிகாரத்திலும் நமக்கும் பங்கு அதிகரித்து வழங்கப்படும் என்ற நம்பிக்கையோடு இருப்போம்.

இவ்வாறு அவர் பேசினார்.



கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி நேற்று (25.02.2026) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, எமனேஸ்வரம், ஜீவா நகரில், 5 கோடி திட்ட மதிப்பீட்டில், சிறிய அளவிலான கைத்தறி பூங்கா (Mini Handloom Park) திறந்துவைத்து, நெசவாளர்களுக்கு தறி உபகரணங்களை வழங்கினார். இந்நிகழ்வில், சட்டமன்ற உறுப்பினர்கள், காதர்பாட்சா முத்துராமலிங்கம், செ. முருகேசன், கைத்தறி இயக்குநர் திருமதி சு. அமிர்த ஜோதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.’

---

## கூட்டுறவுத்துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிடல்!

## முனைப்பறிவில்லாத மூடராக, புழுதிவாரித் தூற்றி நீலிக் கண்ணீர் வடிக்கிறார் எடப்பாடி!

# வெற்று வாக்குறுதிக்கு - தமிழ்நாட்டு மக்கள் தக்க பதிலடி கொடுப்பார்கள்!

## கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிக்கை!



**சென்னை, பிப்.26**

**கூட்டுறவுத்துறையில் காலியாக உள்ள உதவியாளர் / இளநிலை உதவியாளர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புவது தொடர்பாக நேற்று முன்தினம் (24.02.2026) எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி கே.பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கைக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் வெளியிட்டுள்ள பதிலறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-**

கூட்டுறவுத் துறை சார்பில் நடத்தப்பட்ட தேர்வுகளுக்கு,100 நாட்களாகியும் முடிவை வெளியிடாமல் மாணவர்களை வஞ்சித்து வருவதாக உண்மை நிலையைத் தேடும் முனைப்பறிவில்லாத மூடராக, கழக அரசு மீது புழுதிவாரித் தூற்றி நீலிக் கண்ணீர் வடித்துள்ளார் எடப்பாடி பழனிச்சாமி.

எதிர்க்கட்சித் தலைவர் என்கின்ற முறையில் நாட்டில் என்ன நடந்து கொண்டிருக்கிறது? என்பதில் அக்கறை கொண்டவராக இருந்திருந்தால் SRB மற்றும் DRB தேர்வு விஷயத்தில் என்ன நடந்தது என்பதை அறிந்தவராக இருந்திருப்பார்.

ஆனால் அவரோ, தனக்குக் கிட்டியிருக்கும் டெல்லி பாதுஷாக்களின் அடிமைத் தொழிலுக்கு எந்த பாதகமும் வந்து விடக்கூடாது என்பதற்காக, விடிந்தது முதல் விழி மூடி தியானம் செய்து கொண்டிருக்கிறார். அதனால்தான் SRB மற்றும் DRB தேர்வு விஷயத்தில் என்ன நடந்தது என்பதை எடப்பாடியால் அறிந்துகொள்ள முடியவில்லை.

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் செயல்படும் தலைமைக் கூட்டுறவுச் சங்கங்கள் / வங்கிகள் மற்றும் பிரதம, மாவட்ட அளவிலான கூட்டுறவுச் சங்கங்கள் / வங்கிகளில் காலியாக இருந்த 2,848 உதவியாளர் / இளநிலை உதவியாளர் பணியிடங்களை நேரடி நியமனம்மூலம்நிரப்புவதற்காக 06.08.2025 அன்று அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

தலைமைக் கூட்டுறவுச் சங்கங்கள் / வங்கிகளுக்கான எழுத்துத் தேர்வு 05.10.2025 அன்று நடைபெற்றது. அதில், தகுதி பெற்றவர்களுக்கு நேர்முகத் தேர்வு 15.11.2025 அன்று நடத்தப்பட்டது. அதேபோன்று, பிரதம மற்றும் மாவட்ட அளவிலான கூட்டுறவுச் சங்கங்கள்/ வங்கிகளுக்கான எழுத்துத் தேர்வு 11.10.2025 அன்று நடைபெற்றதுடன், அதில் தகுதி பெற்றவர்களுக்கு நேர்முகத் தேர்வு 24.11.2025 அன்று நடத்தப்பட்டது.

இந்நிலையில் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் 1983 இன் பிரிவுகள் 74 மற்றும் 75 (1) மற்றும் தமிழ்நாடு பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன நாணய கடன் சங்கங்களின் பொது பணிநிலை திறன் விதிகள், 2024 ஆகியவை இந்திய அரசமைப்புச் சட்டத்தின் சரத்து 19(1)(C) மற்றும் சரத்து 43-B ஆகியவற்றிற்கு முரணாக இருப்பதாகக் குறிப்பிட்டு மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு எண் 17071/2025 தொடரப்பட்டது.

இவ்வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் முதன்மை அமர்வின் 12.08.2025 நாளிட்ட இடைக்கால ஆணையில், நீதி மன்றத்தின் அனுமதி பெறாமல் நியமன ஆணைகள் வெளியிடப்படக்கூடாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வழக்கின் இறுதித் தீர்ப்பானது தேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கின் இறுதித் தீர்ப்பு விரைவில் கிடைக்கப்பெற கூட்டுறவுத் துறை சார்பில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனவே இவ்வழக்கின் இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னரே மேற்கண்ட தேர்வுகளுக்கான இறுதி முடிவுகள் வெளியிடப்படும்.

இளைஞர்களின் நலனில் அக்கறை கொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான ஆட்சி பொறுப்பேற்ற பின்னர்,

2021-ஆம் ஆண்டு முதல் தற்போது வரை, மாநில மற்றும் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையங்கள் மூலம் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் வங்கிகளில் காலியாக இருந்த பணியிடங்களுக்கு மொத்தம் 13,022 நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள் ளன. இதில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் தவிர்த்து, இதர கூட்டுறவுச் சங்கங்களில் காலியாக இருந்த 2,403 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

மேலும், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் சிறப்பாகச் செயல்படும் பொருட்டு, நியாயவிலைக் கடைகளில் காலியாக இருந்த 8,774 விற்பனையாளர் மற்றும் 1,845 கட்டுநர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

தேர்தலில் வெற்றி பெறவே முடியாது என்பதை அறிந்தே வெற்று வாக்குறுதிகளை வாரி வழங்கும் ‘10 தோல்வி பழனிச்சாமி’, வருகின்ற தேர்தலில் பதினோராவது தோல்வி பழனிச்சாமியாக மாறுவாரே தவிர 10,000 ரூபாய் பழனிச்சாமியாக வாய்ப்பே இல்லை.

காப்பியடி கண்ணாயிரமாக அவதாரம் எடுத்து அரிதாரம் பூசி வீதி எங்கும் வாய்க்கு வந்ததை வாக்குறுதிகளாக வழங்கிக் கொண்டிருக்கும் எடப்பாடி, தன்னிடம் விரயமாக வைத்திருக்கும் மூளையைப் பயன்படுத்தி சொந்தமாகச் சிந்தித்து எதையாவது தேர்தல் வாக்குறுதியாகச் சொல்லி இருக்கிறாரா என்றால் அதுவும் கிடையாது.

புலியைப் பார்த்து பூனை கோடு போட்டுக் கொண்டு உருண்டால், அதை தமிழக மக்கள் யாரும் நம்ப மாட்டார்கள். திருட்டுப் பூனையின் உருட்டல்களுக்கெல்லாம் தமிழ்நாட்டு மக்கள் ஏமாந்தும் விட மாட்டார்கள்.

வருகின்ற சட்டமன்ற தேர்தலிலே முதலமைச்சர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான நல்லாட்சி மீண்டும் தொடரும். ”ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது” என்பது போல எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் வெற்று வாக்குறுதிக்கும், அறிக்கைக்கும் தமிழ்நாட்டு மக்கள் தக்க பதிலடி கொடுப்பார்கள்.


இவ்வாறு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பதிலறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## குளித்தலை இளமுருகு

### பிப்ரவரி 26 (2000)



**திராவிட இயக்கத்தின் வளர்ச்சியிலே அடிநாள் தொட்டு அக்கறையோடும் ஆர்வத்தோடும் ஈடுபாடு கொண்டு உழைத்தவர்.**

**தலைவர் கலைஞர் அவர்களின் ஆரம்பகாலத் தோழர்களில் ஒருவர்.**

**தலைவர் கலைஞர் அவர்கள் 1957ல் குளித்தலை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டபோது வெற்றிக்கு அடித்தளமாக இருந்து உழைத்தவர்களில் இவரும் ஒருவர்.**

**காதல் கலப்புமணம் செய்தவர். ஆண்பெண் சம உரிமையை நிலைநாட்டிட வேண்டுமென்பதற்காகவே தன் பெயரோடு தன் மனைவியின் பெயரையும் இணைத்துக் கொண்டு “இளமுருகு பொற்செல்வி” என்றே தம்மை அழைத்துக் கொண்டவர்.**

**1991ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் இவருக்கு ‘அண்ணா’ விருது வழங்கிச் சிறப்பித்துள்ளார்.**

**“கழகத் தொண்டர்கள் உள்ளத்தில் வரலாற்றுச் சிறப்போடு வாழ்பவர்” என தனது இரங்கல் செய்தியில் தலைவர் கலைஞர் தெரிவித்துள்ளது சிறப்பாகும்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**